## மே– 04 – சனி

### இயேசு அவர்களிடம் நான் தான் அஞ்சாதீர்கள்'' என்றார் யோவான் 6:20

### முதல் வாசகம் : திருத்தூதர் பணி 6 : 1 – 7

அக்காலத்தில் சீடர்களின் எண்ணிக்கை பெருகி வந்தது. அப்போது, கிரேக்க மொழி பேசுவோர் தங்களுடைய கைம்பெண்கள் அன்றாடப் பந்தியில் முறையாகக் கவனிக்கப்படவில்லை என்று எபிரேய மொழி பேசுவோருக்கு எதிராக முணுமுணுத்தனர்.எனவே பன்னிரு திருத்தூதரும் சீடர்களை ஒருங்கே வரவழைத்து, "நாங்கள் கடவுளது வார்த்தையைக் கற்பிப்பதை விட்டுவிட்டுப் பந்தியில் பரிமாறும் பணியில் ஈடுபடுவது முறை அல்ல.ஆதலால் அன்பர்களே, உங்களிடமிருந்து, நற்சான்று பெற்றவர்களும் தூய ஆவி அருளும் வல்லமையும் ஞானமும் நிறைந்தவர்களுமான எழுவரைக் கவனமாய்த் தெரிந்தெடுங்கள். அவர்களை நாம் இந்தப்பணியில் நியமிப்போம். நாங்களோ இறைவேண்டலிலும், இறைவார்த்தைப் பணியிலும் உறுதியாய் நிலைத்திருப்போம்" என்றுகூறினர். திரளாய்க் கூடியிருந்த சீடர் அனைவரும் இக்கருத்தை ஏற்றுக்கொண்டனர். அதன்படியே அவர்கள் நம்பிக்கையும் தூய ஆவியும் நிறைந்த ஸ்தேவான், பிலிப்பு, பிரக்கோர், நிக்கோலா, தீமோன், பர்மனா, யூதம் தழுவிய அந்தியோக்கிய நகரத்து நிர்கொலா என்பவர்களைத் தெரிந்தெடுத்துஅவர்களைத் திருத்தூதர் முன்னால் நிறுத்தினார்கள். திருத்தூதர் தங்கள் கைகளை அவர்கள்மீது வைத்து இறைவனிடம் வேண்டினர்.கடவுளது வார்த்தை மேன்மேலும் பரவி வந்தது. சீடர்களின் எண்ணிக்கை எருசலேம் நகரில் மிகுதியாகப் பெருகிக்கொண்டே சென்றது. குருக்களுள் பெருங்கூட்டத்தினரும் இவ்வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து நம்பிக்கை கொண்டனர்.

**பதில்பாடல் :** ஆண்டவரே உமது பேரன்பு எங்கள் மீது இருப்பதாக.

### நற்செய்தி : யோவான் 6 : 16 – 21

மாலை வேளையானதும் இயேசுவின் சீடர்கள் கடற்கரைக்கு வந்து, படகேறி மறுகரையிலுள்ள கப்பர் நாகுமுக்குப் புறப்பட்டார்கள், ஏற்கெனவே இருட்டிவிட்டது. இயேசுவும் அவர்களிடம் அதுவரை வந்துசேரவில்லை. அப்போது பெருங்காற்று வீசிற்று. கடல் பொங்கி எழுந்தது. அவர்கள் ஐந்து அல்லது ஆறு கிலோ மீட்டர் தொலை படகு ஓட்டியபின் இயேசு கடல்மீது நடந்து படகருகில் வருவதைக் கண்டு அஞ்சினார்கள்.இயேசு அவர்களிடம், "நான்தான், அஞ்சாதீர்கள்" என்றார்.அவர்கள் அவரைப் படகில் ஏற்றிக் கொள்ள விரும்பினார்கள். ஆனால் படகு உடனே அவர்கள் சேரவேண்டிய இடம்போய்ச் சேர்ந்துவிட்டது.

**தியானம்:** ஆண்டவர் என்றும் நம்முடன் இருக்கின்றார். இஸ்ராயேலைக் காக்கிறவர் கண்ணயர்வதுமில்லை, உறங்குவதுமில்லை. (தி.பா.121:4) இன்றைய நற்செய்தியில் குறிப்பிடப்பட்டிருப்பது போல பெருங்காற்று வீசியது, கடல் பொங்கி எழுந்தது சீடர்கள் அஞ்சினார்கள். எமது வாழ்க்கைப் பயணத்திலும் புயல் வீசும், கடல் பொங்கி எழும் சீடர்களைத் தேடி இயேசு சென்றது போல இறைவன் நம்மைத் தேடி வருகிறார். “நான்தான் அஞ்சாதீர்கள்” என்று நம்மைத் தேற்றுகிறார். கடவுள் நம்மை மறப்பது போல தோன்றலாம் ஆனால் தாய் நம்மை மறந்தாலும் கடவுள் நம்மை மறப்பதில்லை என எசாயா கூறுகிறார். ஆகவேதான் எமது இடர்களையும், துயர்களையும் கண்டு பயம் கொள்ளாமல் இறை இயேசுவின் வல்லமையில் நம்பிக்கை கொண்டு நமது வாழ்வைத் தொடருவோம். நமது தேவைகளில் நமக்கு உதவும், ஆபத்துக்களில் நம்மை மீட்கவும் நம் மீட்பர் நம்முடன் இருக்கின்றார். தமது மகிமைக்குரிய வழியில் செல்லுமாறு நம்மை அழைக்கின்றார். இயேசு வெறுமனே வழிகாட்டியல்ல மாறாக அவரே “வழி”யாகி நிற்கிறார். இவ்வழியில் நடப்பவர்கள் ஒழியில் நடக்கிறார்கள். இடையூறுகளுக்கு அஞ்சார். ஏனெனில் இயேசுவே உயிராய், வாழ்வாய் முன் செல்கிறார்.